

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 ஏப்ரல் 22, 2010 புரட்சி 9 முழக்கம் 15 விலை: ரூ.2.50


## கொளுத்தும் வெயிலில் – சாதி தீண்டாமைக்கு எதிராக

# கழகத்தின் பரப்புரை வெற்றி நடை

*கழகம் சார்பாக ஜாதி, தீண்டாமைக்கு எதிரான பெரியார் கொள்கைப் பரப்புரைப் பயணம் 14.4.2010 புதன் அன்று மாலை 6 மணிக்கு தேனி மாவட்டம் போடியில் துவங்கியது. கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், இந்தப் பரப்புரைப் பயணத்தை துவக்கி வைத்தார்.*

பயணம் செய்யும் வாகனத்திலேயே ஒலி பெருக்கி அமைத்து, பரப்புரை நடைபெற்று வருகிறது. இப் பயணக் குழுவில் 25 தோழர்கள் பங்கேற்றுள்ளனர். தோழர் தாமரைக்கண்ணன் தலைமையில் முன் ஏற்பாடுகளை ஒரு குழுவினர் செய்து வருகின்றனர். உண்டியல் வசூலுக்காக ஒரு குழுவும், துண்டறிக்கை வழங்க ஒரு குழுவும், புத்தகம் விற்பனை செய்ய ஒரு குழுவும் என குழுக்களாக பிரிந்து தோழர்கள் பரப்புரை செய்து வருகின்றனர். தோழர் சிற்பி இராசன், மந்திரமா தந்திரமா? நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். தோழர்கள் முதலில் பாடல்களைப் பாடி, பின் பேச்சாளர்கள் உரையாற்றி வருகின்றனர். இப்பயணக் குழுவை தோழர் இராவணன் வழி நடத்தி வருகிறார்.

எல்லா ஊர்களிலும் ஆதரவாளர்கள், தங்களது ஆதரவை தெரிவித்து, உதவிகள் செய்து வருகின்றனர். அதேபோல ஆங்காங்கு புதிய தோழர்கள் தங்களை அமைப்பில் இணைத்துக் கொள்ள முகவரிகள் தருகின்றனர்.

முதல் மூன்று நாள்கள் பயணம் பற்றிய செய்தித் தொகுப்பு:

14.4.2010 புதன் அன்று மாலை போடி வ.உ.சி. சிலை அருகில் தொடக்க விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாலை சரியாக 6.40 மணிக்கு போடி நாயக்கனூர் தோழர் இராசு தலைமையில் கூட்டம் துவங்கியது. தோழர் திருப்பூர் தியாகு சென்னை நாத்திகன் பாடல்களைப் பாடினர்.

இரவு 7 மணிக்கு தோழர் சிற்பி இராசன், 'மந்திரமா, தந்திரமா?' நிகழ்ச்சியை தொடங்கி, 5.15 மணி வரை நடத்தினார். இடையில் ஒரு 15 நிமிடம் மின்தடை ஏற்பட்டபோது, பொது மக்கள் அமைதியாக காத்திருந்தனர்.

"தமிழ்நாட்டில் சாதி தீண்டாமை கொடுமைகள் - ஒரு கள ஆய்வு" நூல் கழக சார்பில் வெளியிடப் பட்டது. கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் நூலை வெளியிட, திருப்பூர் மாவட்ட தலைவர் துரைசாமி முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். தமிழ் புலிகள் அமைப்பின் மாவட்ட செயலாளர் ஆதி. நாகராசன், போடி நாயக்கனூர் கழகத் தோழர் க. சரவணன் ஆகியோர் அடுத்தடுத்த பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

இந்தப் பரப்புரைப் பயணத்தை வரவேற்று, தமிழ் புலிகள் அமைப்பின் மாவட்ட செயலாளர் ஆதி.நாகராசன், பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரனுக்கு சால்வை அணிவித்தார். ஆதித் தமிழர் பேரவை சார்பாக கார்த்தி சால்வை அணிவித்தார். தொடர்ந்து திருப்பூர் துரைசாமி உரையாற்றினார். அடுத்து விடுதலை இராசேந்திரன் பயணத்தின் நோக்கங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். மீண்டும் தோழர் சிற்பி இராசன் 10 நிமிடம் 'மந்திரமா தந்திரமா?' நிகழ்ச்சியை நடத்தினார். க. சரவணன் நன்றி கூற இரவு 9.30க்கு கூட்டம் முடிவுற்றது.

போடி சண்முகசுந்தரபுரம், சேனை தலைவர் மகாஜன சங்க திருமணமண்டபத்தில் இரவு தோழர்கள் தங்கினர்.

15.4.2010 அன்று காலை 9 மணிக்கு பயணக் குழு புறப்படும் வரை, போடிகழகத் தோழர் க. சரவணன் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து பயணச் செல விற்கு ரூ.1000 நன்கொடை வழங்கி அனுப்பி வைத்தார்.

### 2 ஆம் நாள்

15.4.2010 அன்று காலை 9.35 முதல் 10.15 வரை தேவாரம் பேருந்து நிலையம் அருகில். திருப்பூர் தியாகு பாடல்கள் பாடினார். தேவாரம் பகுதியைச் சார்ந்த ஆசிரியர் தன்ராசு பயணக் குழுவை வரவேற்றுப் பேசினார். தோழர் திருச்சி புதியவன் உரையாற்றினார். ஆசிரியர் தன்ராசு அனைவருக்கும் தேனீர் வழங்கினார்.

10.30 முதல் 10.45 வரை தேவாரம், கடைவீதியில் நடந்த கூட்டத்தில் திருப்பூர் தியாகு பாடலைத் தொடர்ந்து பயணத்தின் நோக்கம் குறித்து கோவை மாவட்டத் தலைவர் துரைசாமி உரையாற்றினார். பு.இ.மு. அமைப்பைச் சார்ந்த செல்லையா வாழ்த்துரை வழங்கினார்.

பகல் 11 மணியளவில் குழு பண்ணைப்புரம் வந்து சேர்ந்தது. மேட்டூர் முத்துக்குமார், திருப்பூர் தியாகு பாடல்கள் பாடினர். திருச்சி புதியவன் உரை யாற்றினார்.

11.35 முதல் 11.55 வரை கோம்பையில் பரப்புரை நடந்தது.

தொடர்ந்து உத்தமபாளையத்தில் கிராம சாவடி மற்றும் பேருந்து நிலையத்தில் பரப்புரை நடந்தது. தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத் தோழர் தமிழ்க் கனல் வரவேற்றுப் பேசியதோடு அனைவருக்கும் தமது இல்லத்தில் மதிய உணவு வழங்கினார்.

பிற்பகல் 4 மணியளவில் மீண்டும் பரப்புரைப் பயணம் சின்னமனூரில் தொடங்கியது. வழக்கறிஞர் செல்வக்குமார் வரவேற்று தேநீர் வழங்கினார்.

தொடர்ந்து கோட்டூர், வீரபாண்டி ஆகிய ஊர்களில் பரப்புரையை முடித்துக் கொண்டு பயணக்குழு தேனி வந்தடைந்தது. தேனியில் சிற்பி ராசன் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, தோழர் புதியவன் சிறப்புரையாற்றினார். கொங்குவார்பட்டி தோழர் முத்துக்குமார் இரவு உணவுக்காக ரூ.1000 நன் கொடை வழங்கினார். தோழர்கள் தேனியில் இரவு தங்குவதற்கான மண்டபத்தை தோழர் உடையாளி ஏற்பாடு செய்து உதவினார். இரவு மண்டபத்தில் தோழர்கள், பயணத்தின் நிறைகுறைகளை தாமரைக் கண்ணன் தலைமையில் விரிவாக விவாதித்தனர்.

### 3 ஆம் நாள்

மூன்றாவது நாள் பயணம் - தேனி அல்லி நகரத்தில் காலை 8 மணியளவில் தொடங்கியது. ஆதித் தமிழர் பேரவை நகரச் செயலாளர் விடுதலை வேந்தன் வரவேற்றுப் பேசினார். 'புதிய புலிகள்' பொதுச் செயலாளர் நாகை திருவள்ளுவன் பயணக் குழுவைப் பாராட்டி, சாதி , தீண்டாமை கொடுமைகளை விளக்கிப் பேசினார். தொடர்ந்து தேனி அரசு மருத்துவக் கல்லூரி அருகே பரப்புரை நடந்தது. பரப்புரையைத் தொடர்ந்து பயணக்குழு வைகை அணை ஓய்வு விடுதியில் தங்கியது. உசிலம்பட்டி கழகத் தோழர் ஜெய்ரூபன் சிங் அனைவருக்கும் மதிய உணவு வழங்கினார். மாலை 5 மணியளவில் பயணக்குழு ஆண்டிப்பட்டி பேருந்து நிலையத்திலும், முருகன் தியேட்டர் அருகிலும், இரண்டு பரப்புரைக் கூட்டங்களை நடத்தியது.

இரவு 7.30 மணியளவில் பெரியகுளம் வந்து சேர்ந்தது. அங்கு பெரும் திரளாக மக்கள் கூடியிருந்தனர். அனைவருக்கும் அவசரமாக இருக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டன. சிற்பி இராசன் 'மந்திரமா தந்திரமா?' நிகழ்ச்சியோடு பரப்புரை நடந்தது. தோழர் குமரேசன் பயணக் குழுவினரைப் பாராட்டி ரூ.1000-மும், மருத்துவர் முத்துராஜ் ரூ.1000-மும் வழங்கினர்.

இரவு தோழர்கள் வைகை அணை அரசினர் பயணிகள் விடுதியில் தங்கினர். பரப்புரைப் பயணம்

(4 ஆம் பக்கம்)



போடியில் பயணத்தின் தொடக்க நிகழ்வில் 'தமிழகத்தில் - சாதி, தீண்டாமை கொடுமைகள்' கள ஆய்வு நூலை கழக சார்பில் வெளியிடப்பட்டபோது...

**பரப்புரைப் பயணத்தில் பாடும் தோழர்கள்**

*திருப்பூர் தியாகு*
*சென்னை நாத்திகன்*
*மேட்டூர் முத்துக்குமார்*

**பரப்புரைப் பயணத்தில் முதல் 3 நாட்களிலும்**

கோவை மாவட்ட தலைவர் திருப்பூர் துரைசாமி, திருச்சி புதியவன், கோகுல கண்ணன் - சிறப்புரையாற்றினர்.

நான்காம் நாளில் - சூலூர் வீரமணி பயணத்தில் இணைந்து சிறப்புரையாற்றினார்.

சிற்பி இராசன் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்.

# தங்க ஊசி என்பதால் கண்களை குத்திக்கொள்ள முடியுமா?

‘நாம் தமிழர்’ என்ற பெயரில் ஓர் அரசியல் கட்சி 18.5.2010 அன்று மதுரையில் அறிவிக்கப்பட உள்ளது. அதற்கான பரப்புரைகளும், விளம்பரங்களும், அறிக்கைகளும் அவ்வியக்கத் தோழர்களால் முனைப்புடன் பரப்பப்படுகின்றன. அவர்களோடு சேர்ந்து விளம்பரப்படுத்த அல்ல நாம் இதை எழுதுவது! பின் எதற்கு?

விளம்பர அறிக்கை தாங்கி நிற்கும் சில செய்திகளைப் பற்றிய நமது கருத்துகளைத் தெரியப்படுத்த, தெளிவுபடுத்தத்தான் இதை எழுத நேர்ந்தது.

தோழர் சீமான் நமது பெரியார் திராவிடர் கழக மேடைகளில் பெரியாரின் கருத்துகளை சிறப்பாக, அழுத்தமாக பேசி வந்தவர்தான். ஈழ விடுதலையில் அவர் கொண்டுள்ள அக்கறையும், ஆர்வமும் போற்றத்தக்கதுதான். நமது இயக்கத்தோழர்களிடம் நல்லுறவும், இயக்க முன்னணியினரிடம் பெரு மதிப்பும் கொண்டவர்தான்.

ஆனாலும், தங்க ஊசி என்பதற்காக கண்ணைக் குத்தும்போதும் நாம் அமைதியாக இருந்துவிட முடியாது; இருந்துவிடக் கூடாது.

அதுவும் குறிப்பாக “அறிஞர்” குணாவின் பாதையில் ‘தமிழர் – தமிழரல்லாதவர்’; ‘திராவிடர் – திராவிடம்’ பற்றி அவர் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிற கருத்துக்களை நாம் உரிய வகையில் விளக்கவும், அப்பொய்மைகளை அம்பலப்படுத்தவுமான கடமை நமக்கு உண்டு; நமக்கு மட்டுமே உண்டு.

எனவேதான் இதை நாம் எழுதலானோம்.

தமிழர்கள், திராவிடர்கள் பற்றிய விரிவான ஆராய்ச்சிகளை ‘நாம் தமிழர் இயக்கம்’ மேற்கொண்டிருக்கிறது. ‘நல்ல தமிழர்களை’ அவர்கள் தேடிக் கிளம்பியிருக்கிறார்கள்.

ஆனால், அவர்களின் தமிழர் அடையாள ஆராய்ச்சியின்படி ஈழ விடுதலைக்கும் விடுதலைப்புலிகளுக்கும் பேருதவி செய்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரனைக்கூட ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அவர் பிறப்பால் மலையாளி என்பதால் ‘திராவிடராகி’ விடுகிறார். நான்காவது ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில், ஈடில்லாத போராட்டங்களை நடத்திய கோவை இராமகிருட்டிணன், பேராசிரியர் சரசுவதி ஆகியோர்கூட, அவர்கள் கண்களுக்கு ‘நல்ல தமிழர்களாக’ புலப்படவில்லை.

ஆங்கிலேயர் கால்டுவெல் கண்டுபிடித்த சொல்லான திராவிடத்தை எப்படி ஏற்க முடியும் என்ற வாதங்களையெல்லாம் முன் வைக்கிறார்கள். ‘கால்டுவெல்’ என்ற ஆங்கிலேயரின் கண்டுபிடிப்புகளையெல்லாம் ஏற்கக் கூடாது என்று அவர்கள் ‘ஆராய்ச்சி’கள் கூறினாலும், சீமான் என்ற வடமொழிப்பெயரை சூட்டிக் கொண்டுள்ளதற்காக அவரை, நாம் தமிழன் இல்லை என்று சொல்லப் போவதில்லை. அவர்களின் ஆராய்ச்சியை சீமானுக்கு நாம் பொருத்திப் பார்க்கத் தயாராக இல்லை.

ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம். ‘திராவிட’ என்ற சொல்லை தங்களுடன் இணைத்துக் கொண்டதற்காகவே கலைஞர் கருணாநிதியையோ, விஜய்காந்தையோ, ஜெயலலிதாவையோ நாம் தூக்கி சுமப்பவர்கள் அல்ல.

கலைஞர்கூட ஒரு காலத்தில் அவர் சார்ந்த சமூகப் பார்வையோடு ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக திராவிடர் இயக்கத்துக்கு வந்தவர்தான். இன்று அவரிடம் அந்த சமூகப் பார்வை எல்லாம் காணாமல் போய் பெரு முதலாளிகளின் வர்க்கப் பார்வைக்கு வந்துவிட்டார்.

ஜெயலலிதா எப்போதுமே தமிழினத்துக்கு எதிரிதான். இந்த சக்திகள் அரசியல் களத்திலிருந்து ஒதுக்கப்பட்டு, தமிழர்களுக்கான புதிய அரசியல் சக்தி ஏதேனும் தோன்றாதா என்று உண்மையாக ஏங்கும் தமிழர்கள் ஏராளம் உண்டு. விஜய்காந்த் போன்ற குழப்பவாதிகளைவிட சீமான் போன்றவர்கள் அரசியல் களத்துக்கு வரட்டுமே என்ற எண்ண ஓட்டமும் நமக்கு உண்டு.

ஆனால், புதிதாக புறப்பட இருக்கிற ‘நாம் தமிழர்’ தமிழர்களை ஆரிய எதிர்ப்பாளர்களாக அடையாளப்படுத்திய பெரியாரின் பார்வையைத் தூக்கி எறிந்துவிட்டு, திராவிடர் எதிர்ப்பாளராக அடையாளப் படுத்துவதில் முனைப்புக் காட்டத் தொடங்கிவிட்டது.

பெரியார் முன்னிறுத்திய ‘திராவிடர்’ என்பது **தமிழர்களுக்கான – தமிழர்களை** பார்ப்பனிய அடிமைப் பண்பாட்டிலிருந்து மீட்டெடுக்கும் குறிச்சொல் என்ற அடிப்படை உண்மையையே திசை திருப்பி, அது ஏதோ கேரளா, கர்நாடக, ஆந்திர மாநிலத்தில் வாழும் இனங்களிடம் தமிழர்களை அடிமைப்படுத்துவதாக ஒரு சித்திரத்தை தீட்டிக் காட்ட படாதபாடுபடுகிறார்கள். இதில் அளவில்லாத மகிழ்ச்சி ஆரியத்துக்குத் தான்.

‘அப்பாடா, நாம் தமிழர் வந்துவிட்டது; இனி நமக்கு ஆபத்தில்லை’ என்று அவாள் கூட்டம், மகிழ்ச்சியில் கூத்தாடக் கூடும். தமிழருக்கு அன்றும் இன்றும் என்றும் கேடானது ஆரியம். அதற்கு அரண் அமைத்துக் கொண்டிருப்பது இந்தியம்; உண்மையில் தமிழர்கள் மீதுசுமத்தப் பட்டுள்ள ஒட்டு மொத்த அடிமைத்தனங்களுக்கும் எதிரான பண்பாட்டுப் புரட்சியை முன்னெடுக்கும் வலிமையான போர்வாள் திராவிடர் – திராவிடம் என்ற லட்சியச் சொல்; ஆனால், ‘நாம் தமிழருக்கு’ அவைகள் கசக்கின்றன.

தமிழ்நாட்டைத் தவிர, பிற மொழிக்காரர்கள் வேறு எந்த மாநிலத்திலாவது முதல்வரானது உண்டா என்றெல்லாம் கேட்கிறார்கள். அடக்கத்துடன் நாம் நினைவூட்டுகிறோம். பக்கத்து நாடான கன்னட நாட்டில் தரம்சிங் என்ற மராட்டியர் முதலமைச்சராக இருந்திருக்கிறார்.

‘நாம் தமிழர்’ அமைப்புத் தோழர்கள் பலரின் சட்டைகளை அலங்கரித்துக் கொண்டிருக்கும் சேகுவேரா கூட அர்ஜென்டினாவில் பிறந்தவர் தான் . அவர் கியுபா விடுதலைக்குப் போராடினார். அத்துடன் நிற்கவில்லை.பொலிவியா விடுதலைக்கும் போராடச் சென்றார். ‘நாம் தமிழர்’ அமைப்பின் திராவிடர் எதிர்ப்புக் கோட்பாட்டைப் பொருத்திப் பார்க்கும்போது, சேகுவேராவும் கூட கியூபாவின் அன்னியர் தானே?

இனி அவர்கள் பார்வையில் ப. சிதம்பரம், சோழவந்தான் சுப்ரமணியசாமி, புதுவை நாராயணசாமி எல்லாம் திராவிடர் அல்லாத “நல்ல தமிழர்”களாகி விடக் கூடும்.

இன்னும் விரிவாக எழுதலாம்; திராவிடர் எதிர்ப்பை அவர்கள் தொடரும்போது அதற்கான விளக்கங்களும் பதில்களும் வரத்தானே செய்யும்? அவைகளுக்கெல்லாம் இந்த விளக்கம் ஒரு சிறிய முன்னோட்டம் மட்டுமே!

**– கொளத்தூர் தா.செ. மணி**
**தலைவர், பெரியார் திராவிடர் கழகம்**
19.4.2010

## நரிகளை விரட்டுவோம்!

*– தமிழேந்தி –*

நித்தியா னந்தா! நித்தியா னந்தா!
நேரில் மாட்டிக் கொண்டாயடா!
பக்தி வேடம் எல்லாம் கலைந்து
பலே கில்லாடி ஆனாயடா!

ஊரை ஏய்க்கக் காவி உடையா?
உதையில் இருந்து தப்பினாயடா!
நேரில் வந்து சிக்கி யிருந்தால்
நெம்பிச் சுளுக்கெடுத் திருப்பாரடா!

அடித்தே துவைத்தார்; அட,உன் படத்தைச்
செருப்பால் அர்ச்சனை செய்தாரடா!
உடைத்தே போட்டார் ஆசிர மங்களை
ஓடித் தீவைத்து எரித்தாரடா!

பிரம்மச் சரியம் பேசிக் கொண்டே
தினம்உனக் கொருபெண் கேட்குதோடா?
அரசு, சட்டம் எல்லாம் நீங்கள்
ஆட்டும் படியெலாம் ஆடுதேடா!

உன்னைப் போல்பல பெண்ணைத் தொட்டான்
சங்கரன் ஒண்ணும் ஆகலடா!
பண்ணினா னேஒரு கொலையும் அந்தப்
பார்ப்பான் என்னமா சுத்தறாண்டா?

பிரே மானந்தா, கல்கி, சுகதேவ்,
மயிகள் மயக்கம் தெரியலடா!
பெரிய மனுஷன்கள் பலபேர் உங்கள்
பின்னால் இருப்பது தெரியலடா!

தியானம், யோகா, பஜன்கள் எல்லாம்
தின்று கொழுப்பவன் தேவையடா!
ஞானம், முக்தி, மோட்சம் எல்லாம்
நரிகளின் மோசடி வார்த்தையடா!

அறியாமை இருளின் பதுங்கு குழியில்
அவதா ரங்கள் வாழுமடா!
திருந்திய மக்கள் தெருவில் இறங்கினால் – உம்போல்
திருட்டுக் கூட்டம் ஓடுமடா!

## பெரியார் திராவிடர் கழகத்துக்கு வாதாடுவதில் பெருமையடைகிறேன்

# பெரியாரியம் – காலத்தின் கட்டாயம்

*பெரியார் திராவிடர் கழகத் தோழர்களுக்கு வாதாடியதில் பெருமையடைகிறேன் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வழக்கறிஞர் தோழர் ப.பா.மோகன் குறிப்பிட்டார்.*

*20.3.10 அன்று ஈரோட்டில் நடைபெற்ற பெரியாரியல் விளக்கப் பொதுக் கூட்டத்தில் இந்தியப் பொதுவுடமைக் கட்சி வழக்கறிஞர் ப.பா.மோகன் ஆற்றிய உரை :*



## ஈரோடு பாராட்டுக் கூட்டத்தில் வழக்கறிஞர் ப.பா. மோகன் ஏற்புரை

தோழர் இராம. இளங்கோவன் வாதாடிய இரு வழக்குகளும் இலவசமாக வாதாடியதாகக் கூறினார். இதே மேடையில் பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் கொடியினை அறிமுகம் செய்தபோது, என்னையும் பேச அழைத்திருந்தார்கள். அந்த மேடையிலேயே நான் கூறினேன், எங்களைப் பொருத்தவரை நான் சார்ந்திருக்கின்ற இயக்கம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும், இந்த மண்ணைப் பொருத்தவரை, தமிழகத்தைப் பொருத்த வரை, மார்க்சியம் என்பது பெரியாரிசத்தோடு பின்னிப் பிணைந்த ஒன்று என்பதனை நான் தீர்க்கமாக உணர்ந்து கொண்டிருப்பவன்.

நான் சென்னை சட்ட கல்லூரியிலே படித்துக் கொண்டிருக்கிற காலத்தில் தோழர் தா. பாண்டியன் பல தி.க. கூட்டத்திற்கு அழைத்துப் பேசிய போதெல்லாம் நான் சென்று பார்த்திருக்கிறேன்.

தியாகராய நகர் கூட்டத்திலே அவர் பேசிய போது சொன்னார், இனி தமிழகத்திலே இருக்கக் கூடிய அடக்குமுறைகளை அநீதிகளை, பொய் யுரைகளை, காவியுடைகளை தரித்திருப்போரின் கயமைத்தனத்தினை எதிர்க்கக்கூடிய மிகப் பெரிய இயக்கங்களாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், தி.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக மக்கள் மத்தியிலே புறப்படும் என்று சொன்னார். ஆனால், நடைமுறையிலே அது இன்றைக்கு வரை செயலாக்கப்படவில்லை.

நாம் விரும்புவதெல்லாம் இதுதான். இந்திய மண்ணைப் பொருத்த வரையிலும் “இந்தியா” என்ற ஒரு நாடு பிரிட்டிஷ் ஆட்சியிலே உருவாக்கப் பட்டதே தவிர, “இந்தியா என்பது ஒரு நாடு அல்ல தேசம் அல்ல” - என்பது எல்லோருக்கும் தெரியும்.

இந்தியாவைப் பொருத்தவரை இந்திய மண்ணிலே ஒரு சமத்துவ சமுதாயத்தை நாம் படைக்க வேண்டும் என்று சொன்னால், அது பொதுவுடைமை அமைப்பை இந்த மண்ணிலே படைக்க வேண்டும் என்று சொன்னால், இந்த உலகத்தைப் பற்றிய ஆய்வுகள் இந்த பிரபஞ்சத்தைப் பற்றிய ஆய்வுகளான, இந்த உலகம் தோன்றிய விதத்தை, ஜீவராசிகள் தோன்றிய விதத்தைப் பற்றி யெல்லாம் ஆய்வு நடத்தியிருக்கக்கூடிய டார்வினியம் ஆகட்டும். டார்வினியத்தை தொடர்ந்து மனிதகுலம் தோன்றி எது மனிதனை மனிதனாக மாற்றியது என்று உழைப்பையும், கருவியையும் சொல்லியிருக்கக் கூடிய, மார்க்சியத்தையும் உலகம் இன்றைக்குக் கற்றிருந்தால்கூட, இந்தியாவைப் பொருத்த வரையில் மேற்கத்திய நாடுகளுக்கு இருக்கக்கூடிய சமூக பொருளாதார அமைப்பு என்பது வேறு. ஆனால், இந்தியாவைப் பொருத்தவரை மார்க்சுடைய வார்த்தையிலேயே இது ஒரு ஆசிய உற்பத்தி முறை (Asiatic mode of Production) சமூகம்.

இங்குள்ள உற்பத்தி முறை அங்குள்ள உற்பத்தி முறைக்கு மாறானது என்ற வகையில் இதைப் பற்றி ஆய்வு செய்தார் மார்க்ஸ். அப்படி ஆய்வு செய்த போது, இங்கிருக்கும் சாதியம் - இங்கிருக்கும் ஆதிக்கம் என்பது மிகப் பெரிய கொடுமை என்று கூறினார். இந்தியாவைப் பற்றி காரல் மார்க்ஸ் எழுதியது சின்னஞ்சிறு புத்தகம் தான். ஆனால், இந்தியா பற்றி அவருக்கும் கிடைத்திருக்கும் விவரத்தை வைத்துக் கொண்டு, இங்குள்ள நிலப் பிரபுத்துவ ஆதிக்கத்தையும், விவசாயிகள் மீது நடத்தப்பட்ட கொடுமைகளையும், பழங்குடி மக்களின் போராட்டங்களையும், அற்புதமாக விவரித்துள்ளார்.

அதைத் தொடர்ந்து இங்கே பார்க்கிற போது தான் இந்தியா என்ற இந்த மண்ணை ஒரு பொதுவுடைமை அமைப்பாக மாற்ற வேண்டு மென்று சொன்னால், மார்க்சியம் - பெரியாரியலை, அம்பேத்கரியலை உள் வாங்கிக் கொண்டுதான் மாற்ற முடியுமே தவிர, நாம் மார்க்சியத்தை நேரடியாகப் பொருத்திப் பார்க்க முடியாது என்ற உண்மையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

ஏனென்று கேட்டால், இங்கே பேசிய தோழர்கள் சொன்னார்கள், நாம் பிரித்துப் பார்க்க முடியாது! அருமைத் தோழர்கள் கொளத்தூர் மணி ஆகட்டும், இராமகிருட்டிணன் ஆகட்டும், அவர்களை நான் பார்க்கிறபோது, நடத்திய போராட்டங்களை நான் சின்ன வயதில் இருந்து பார்க்கிறபோது, இன்றைக்கு வரைக்கும் அவர்களை ஒரு கம்யூனிஸ்ட்டாகத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேனே தவிர, அவர்களை வேறுபடுத்திப் பார்க்க முடியாது. காரணம் அவர் களுடைய போராட்டங்களை எங்கள் போராட்டங் களுடன் வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லை.

இந்த மண்ணை சரியாகப் புரிந்து கொண்ட காரணத்தினால், எது தேவையோ - அதைச் சொன்ன பெருமை பெரியாருக்கு உண்டு.

அவர் ரஷ்யா செல்வதற்கு முன்னால், கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை மொழி பெயர்த்திருக்கிறார். அப்படி மொழி பெயர்த்து வெளியிட்ட ஒரே இயக்கம் பெரியாருடையதுதான். இது சாதாரணமான விவரம் அல்ல. கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை தமிழில் மொழிபெயர்த்தது மட்டும் அல்ல, பகத்சிங், ‘நான் ஏன் நாத்திகனானேன்’ என்ற புத்தகத்தை ஜீவாவை வைத்து மொழி பெயர்க்க வைத்து வெளியிட்டார்.

நம் கைக்குள் உலகம் அடங்கும் காலம் இது! உலகத்தை பகுத்தறிந்து பார்க்கும் காலம் இது. அவனன்றி ஒரு அணுவும் அசையாது என்று சொன்ன பழமொழியை உடைத்து, அணுவைப் பிளந்து நியூட்ரான், புரோட்டான் என்பதெல்லாம் கிடைக்கிறது என்று விஞ்ஞானம் ஏற்றுக் கொள்ளும் காலம் இது. இன்றைக்குப் பேசுவது மிக எளிதானது. அன்றைக்குப் பெரியார் நடத்திய போராட்டங்கள், சாகசங்கள் வரலாற்றுப் புகழ் மிக்கவை!

ஆகவே, பெரியார் இயக்கத்துக்காக வாதாடக் கூடிய இந்த இரண்டு வழக்குகளையும் எனக்குக் கிடைத்த மிகப் பெரிய வாய்ப்பாகக் கருதினேன்.

நான் பெரியாரைப் புரிந்து கொள்வதற்கு, பெரியாரை மார்க்சிசயத்துடன் பொருத்தி ஒரு வழக்கிலே நீதிமன்றத்திலே நான் பேசுவதற்கு மிகப் பெரிய வாய்ப்புதான் இந்த வழக்கே தவிர, மற்றபடி நான் மிகப் பெரிய அளவில் எதையும் சாதித்து விடவில்லை.

அன்றாடம், நீங்கள் கூட்டத்தில் பேசக்கூடிய பேச்சுக்களை எல்லாம் தொகுத்து, சட்டத்துடன் சேர்த்து வழக்கில் வாதாடினேனே தவிர, புதிதாக எதையும் நான் சொல்லவில்லை.

ஈரோட்டில்கூட கர்ப்பக்கிரக நுழைவுப் போராட்டம் நடந்ததாக நான் படித்திருக்கிறேன். கர்ப்பக்கிரகத்தில் குத்தூசி குருசாமி போன்றவர்கள் நுழைந்தபோது, ஆலயத்தைப் பூட்டிவிட்டனர். அத்தனைப் பெரிய போராட்டங்களை எல்லாம் இங்கே துவக்கி வைத்திருக்கிறார்கள்.

சாதாரணமாக அன்றைக்கு இருந்த நீதிபதிகள், யாராவது ‘சூத்திரர்கள்’ சாட்சி அளிக்க வந்தால், அறுபது அடி தள்ளி நிற்க வைத்துத்தான் சாட்சி யத்தைப் பதிவு செய்வார்களாம். அன்றைய நிலை அப்படி இருந்தது.

பெரியார் கொண்டிருக்கிற தத்துவம் என்பது உண்மையிலேயே தமிழ்நாட்டுக்குரிய மார்க்சியம் என்பதை நாம் இன்றைக்கு மறைக்க முடியாது, மறுக்க முடியாது.

பெரியார் இன்றைக்கு சீர்திருத்தக்காரர் அல்ல - பல பேர் சீர்திருத்தவாதி என்று சொல்கிறார்கள். அவர்கள் புரட்சிக்காரர்கள். பெரியார் ஒரு கலகக்காரர் மட்டுமல்ல, சமுதாயத்தில் மாற்றம் ஏற்படுத்திய புரட்சிக்குச் சொந்தக்காரர்.

ஆக, பெரியாருடைய இயக்கம் என்பதும், அது இன்றைக்குக் கொண்டிருக்கிற நடைமுறை என்பதும் இந்தக் காலகட்டத்திற்கு மிக மிகத் தேவை என்பதை வாழ்க்கை உணர்த்திக் கொண்டிருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால், பெரியாரின் தத்துவத்தை, ஒரு குமிழுக்குள் போட்டு அடைக்க முடியாத மாபெரும் சிந்தனையை, பெரியார் பேரைத் தாங்கிக் கொண்டிருப்பவர்களே அடைக்கப் பார்க் கிறார்கள். நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அறிவுசார் சொத்துக்களுக்கு சட்டம் உண்டு; காப்புரிமைச் சட்டம் உண்டு.

பெரியாரின் சிந்தனைகளை, கொள்கைகளை, எழுதிய எழுத்துக்களை அவர் குடி அரசு இதழில் எழுதிய எழுத்துக்களை எல்லாம் வீரமணி போன்றவர்கள் வியாபாரம் ஆக்குவதற்காக குமிழுக்குள் அடைக்கப் பார்க்கிறார்கள்.

ஆனால், அடைக்க விட மாட்டோம். சொத்தை விற்றாவது அதைக் கொண்டுபோய் மக்களிடம் பரப்புவோம் என்று இருக்கிறதே இந்த இயக்கம், அதுதான் உண்மையான பெரியார் திராவிடர் கழகம்.

ஆகவே, இன்றைக்குப் பெரியார் திராவிடர் கழகத்தோடு இணைந்து ஒரு கம்யூனிஸ்டு என்ற முறையில் நடத்தும் போராட்டங்களில் எல்லாம் நான் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

அன்றைக்குத் தோழர் தா. பாண்டியன் சொன்னதைப்போல் பெரியார் திராவிடர் கழகமும், இந்தியப் பொதுவுடமைக் கட்சியும் இரட்டைக் குழல் துப்பாக்கியாய், அடக்குமுறையை, அநீதியை, சுரண்டலை எதிர்த்துப் போராடும் என்று இந்த மன்றத்தில் நான் பதிவு செய்து கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்தில் நடைபெற்றதை எல்லாம் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பெரியார் என்ற மாபெரும் மனிதரின் தேவையை உணருகிறார்கள். சீரங்கத்தில் பெரியார் சிலையை யாரோ சில கயவர்கள் உடைத்தபோது அதற்கு ஒரு எதிர் வினையை ஈரோட்டிலும், தமிழகத்திலும் பதிவு செய்த பெருமை பெரியார் திராவிடர் கழகத்திற்கு உண்டு. அது இயற்கையான ஒன்று.

பெரியார் சிலையை உடைத்தது என்பது பெரியார் இயலை, வாழ்க்கையை, தத்துவத்தை, பகுத்தறிவை உடைத்ததற்கு அர்த்தமானது.

ஆகவே, அதற்கு ஒரு எதிர்வினை என்பது கட்டாயம் தேவை என்பதை தோழர்கள் உணர்த்தி யுள்ளார்கள். அதில் முக்கியமானது என்னவென்றால், பெரியார் போராடிப் போராடி உருவாக்கி யிருக்கின்ற மாற்றங்களை இந்த மேடையில் தோழர்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டுவதில்லை. மயிலாப்பூர் சீனிவாச அய்யங்கார் வீட்டுக்கு காந்திஜி வரும்போது, அவர் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து போவதுதான் வழக்கமாக இருந்திருக்கிறது. பெரியாரின் இயக்கத்திற்குப் பிறகுதான் சீனிவாச அய்யங்கார், காந்தியாரை வீட்டுக்குள் அனுப்பியதாக வரலாறு சொல்கிறது.

(தொடரும்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

## இராசிகளுக்கு அஞ்சல் தலையா?

# அஞ்சலகம் முன் கழகம் கிளர்ச்சி – கைது!

பஞ்சாங்கம் கூறுகிற 12 ராசிகளுக்கும் இந்தியாவின் அஞ்சல்துறை, அஞ்சல் தலையை 14 ஆம் தேதி வெளியிட்டது. இந்த அறிவிப்பு 14 ஆம் தேதி வந்தவுடன், அன்றே பெரியார் திராவிடர் கழகம் போராட்ட அறிவிப்பை வெளியிட்டது. 14 ஆம் தேதி சென்னை மயிலாப்பூரில் நடந்த அம்பேத்கர் பிறந்த நாள் பொதுக் கூட்டத்தில் பேசிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அடுத்த நாளே அஞ்சலகம் முன் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து அடுத்த நாளே சென்னை, சேலம், கோவை நகரங்களில் தோழர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தி கைதானார்கள். தூத்துக்குடி, கோபியிலும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

### சென்னையில்

சென்னையில் அண்ணாசாலையிலுள்ள தலைமை அஞ்சலகம் முன் ஏப்.15, பிற்பகல் 4 மணியளவில் ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட செயலாளர் உமாபதி



தலைமையில் 50-க்கும் மேற்பட்ட தோழர்கள் திரண்டனர். திருவல்லிக்கேணி காவல் நிலையத்திலிருந்து ஆர்ப்பாட்டத்துக்கு புறப்பட்டபோது, காவல்துறை கைது செய்தது. அனைவரும் சிந்தாதிரிப் பேட்டையிலுள்ள திருமண மண்டபத்தில் வைக்கப்பட்டு, இரவு 7 மணியளவில் விடுதலை செய்யப்பட்டனர்.

### கோவையில் கைது

கோவையில் மூடநம்பிக்கைகளை பரப்புகிற வகையில் 12 ராசிகளுக்கு அஞ்சல்தலை வெளியிட்ட அஞ்சல் துறையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்திய கழகத்தினர் 40 பேர் கைதானார்கள். அறிவியலுக்கு எதிராக மூடநம்பிக்கையை பரப்புகிற தன்மையில் அஞ்சல்துறை 12 ராசிகளுக்கு சிறப்பு



அஞ்சல் தலை வெளியிடுவதைக் கண்டித்தும், வெளியிட்ட அஞ்சல்தலைகளை திரும்பப் பெறக் கோரியும் 15.4.2010 கோவை, அவினாசி சாலை, அண்ணா சாலை எதிரிலுள்ள மத்திய அஞ்சல் துறை அலுவலகம் முன்பு கழகப் பொதுச்செயலாளர் கு. இராம கிருட்டிணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்திற்கு காவல்துறை அனுமதி மறுத்து, தோழர்கள் 40 பேரைக் கைது செய்து இரயில் நிலையம் அருகிலுள்ள தனியார் விடுதி அரங்கில் வைத்து இரவு 9 மணிக்கு விடுதலை செய்தது.

ஆர்ப்பாட்டத்தில் கழக மாநகர செயலாளர் வே. கோபால், அலுவலக பொறுப்பாளர் சா. கதிரவன், தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் ந. பன்னீர் செல்வம், மணிகண்டன், நேருதாசு, பாண்டியன், சென்னிமலை இராமசாமி, கா. சோமசுந்தரம், நாகராசு, பெரியார் மணி, திருப்பூர் மூர்த்தி, கோபிநாத் மற்றும் தோழர்கள் பங்கேற்றனர்.

### தூத்துக்குடியில் ஆர்ப்பாட்டம்

தூத்துக்குடி மாவட்ட கழக சார்பில் 12 ராசிகளுக்கும் அஞ்சல்தலை வெளியிட்ட மத்திய அரசையும், அஞ்சல் துறையையும் கண்டித்து, 17.4.2010 அன்று மாலை 6 மணிக்கு தூத்துக்குடி காந்தி சிலை முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் கோ.அ. குமார் தலைமை தாங்கினார். ஆதித் தமிழர் பேரவையின் ரா.வே. மனோகர் துவக்கி வைத்து உரையாற்றினார். தொடர்ந்து கழக மாவட்ட அமைப்பாளர் ச.க. பாலசுப்பிரமணியன், மாவட்ட துணைத் தலைவர் வே. பால்ராசு, கிறித்தவர் வாழ்வுரிமை இயக்கத்தின் சுந்தரி மைந்தன் ஆகியோர் கண்டன உரையை தொடர்ந்து தலைமை செயற்குழு உறுப்பினர் பால். பிரபாகரன் விளக்க உரையாற்றினார். கழக மாவட்டத்தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு முடித்து வைத்து உரையாற்றினார். இரா. உதயகுமார் நன்றியுரையாற்றினார். நிகழ்வில் மாவட்ட துணைச் செயலாளர் க. மதன், மாவட்ட பொருளாளர் செ. செல்லத்துரை, மாநகரத் தலைவர் சா.த. பிரபாகரன், மாநகர துணைத் தலைவர் ரவிசங்கர், நெல்லை தோழர்கள் சி.ஆ. காசிராசன், ராசா, செந்தில், அமிர்தராசு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### கோபியில்....

அரசியல் சட்டபடி அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பதை விடுத்து, மூடநம்பிக்கையை வளர்க்கும் வகையில், இராசிகளின் பெயரில் அஞ்சல் தலைகளை வெளியிடும் மத்திய அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் 15.4.2010 வியாழன் காலை 11 மணிக்கு கோபி தலைமை அஞ்சலகம் முன்பு, கோபி நகர அமைப்பாளர் கா.ம. குணசேகரன் தலைமையிலும், மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன், மாவட்ட துணைத் தலைவர் கா.சு. வேலுச்சாமி முன்னிலையிலும் நடைபெற்றது.




மதச்சார்பின்மைக்கு எதிராக, மூடநம்பிக்கையின் ஒரு பகுதியாக உள்ள சோதிடம், இதில் வரும் 12 இராசிகளின் பெயரில் அஞ்சல் தலைகளை வெளியிடும் மத்திய அரசை வன்மையாக கழகம் கண்டிக்கின்றது. அறிவியல் மனப்பானமையை வளர்க்க வேண்டும் என்ற அரசியல் சாசனத்துக்கு எதிரானது, இது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட வழக்கறிஞர் பிரிவு அமைப்பாளர் வழக்கறிஞர் ஜெகதீசன், கொ.கு. சுப்ரமணியன், கா.சு. வேலுச்சாமி ஆகியோரின் கண்டன உரைக்குப் பின்னர் இறுதியாக மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன் கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் 40-க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மாவட்ட அமைப்பாளர் சதுமுகை பழனிச்சாமி, மாவட்ட இளைஞரணி தலைவர் இராசேந்திரன், மாவட்ட அமைப்பாளர் இரகுநாதன், நகரச் செயலாளர் செயராமன், கருப்பணன், அருளானந்தம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செந்தில்குமார், ரமேசு, நகரத் தலைவர் நாகப்பன், விசு, விசயசங்கர், ந. தாமோதரன், மூர்த்தி, சுப்ரமணி, பழனிச்சாமி, வடிவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர். ●

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பற்றிய கலந்துரையாடல் கூட்டத்தில் நிறைகுறைகள் பற்றி பேசப்பட்டது.

மூன்று நாள் பயணத்திலும் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்றார். அடுத்த நாள் கோவையில் நடக்க இருக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக மாவட்ட தலைவர் திருப்பூர் துரைசாமி அவர்களுடன் காரில் திருப்பூர் பயணமானார்.

### 4 ஆவது நாள்

நான்காவது நாள் பரப்புரை தேவதாணப்பட்டியில் காலை 9 மணியளவில் தொடங்கியது. தோழர் இளங்கோவன் வரவேற்று தேநீர் வழங்கினார்.

கல்லுப்பட்டியில் நடந்த பரப்புரையில் தோழர்கள் கொள்கைப் பாடல்களைப் பாட, தோழர் சூலூர் வீரமணி பயணத்தில் பங்கேற்று சிறப்புரையாற்றினார். தோழர் ஜெயப்பாண்டி - விஜயலட்சுமி ஆகியோர் தமது இல்லத்தில் மதிய உணவு வழங்கினர். சிறிது நேர ஓய்வுக்குப் பிறகு பயணக்குழு வத்தலகுண்டு வந்தடைந்து, பரப்புரையைத் தொடங்கியது.

பயணத்தில் தொடர்ந்து வரும் தோழர் ஆல்பர்ட் தமது சொந்த ஊரான செம்பட்டியில் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து அனைவரையும் தேநீர் அளித்து வரவேற்றார். சிற்பி ராசன் ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சியோடு பரப்புரை நடந்தது. தோழர்கள் அனைவரும் திண்டுக்கல் நோக்கிப் பயணமானார்கள். இரவு திண்டுக்கல்லில் தோழர்கள் தங்கினர். பயணம் தொடர்கிறது.


**பயணத்திலிருந்து**
**அ. கோகுல கண்ணன்**

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 90030 87605

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 22nd April 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 ஏப்ரல் 29, 2010 புரட்சி 9 முழக்கம் 16 விலை: ரூ.2.50


## வழிநெடுக வரவேற்பு; உணவளிப்பு

# கழகத்தின் பரப்புரை பயணத்துக்கு அனைத்துக்கட்சியினரும் ஆதரவு



பழனி பொதுக் கூட்டத்தில் கொங்கு இளைஞர் பேரவை மாநில அமைப்பாளர் உ.தனியரசு பேசுகிறார்

கொளுத்தும் கோடை வெய்யிலில் சாதி, தீண்டாமைக்கு எதிராக பெரியார் திராவிடர் கழகசெயல் வீரர்கள் ஒரு மாத காலம் திட்டமிட்டு ஏப்.14 இல் தொடங்கிய பரப்புரைப் பயணம் தொடர்ந்து சிறப்புடன் நடைபெற்று வருகிறது. சமூகத்தின் உண்மையான ஒரு பிரச்சினையில் மக்களின் அரசின் கவனத்தை ஈர்ப்பதற்கு கழகம் மேற்கொண்டுள்ள இந்தப் பயணத்துக்கு கட்சிகளைக் கடந்து ஆதரவு கிடைத்து வருகிறது. ம.தி.மு.க., தி.மு.க., விடுதலை சிறுத்தைகள், தே.மு.தி.க., அ.தி.மு.க. கட்சிகளைச் சார்ந்த தோழர்களே கழகத் தோழர்களை வரவேற்றும், உணவு அளித்தும் தங்கள் ஆதரவை வெளிப்படுத்தி வருவது, இப் பயணத்துக்கு கிடைத்த வெற்றியாகும். கிராமங்களில் தீண்டாமைக்கு எதிராக பிற்படுத்தப்பட்ட சாதியைச் சார்ந்தவர்களே கழக மேடைகளில் பேச முன்வருவது பயணத்தின் நோக்கத்துக்கு கிடைத்த மற்றொரு வெற்றி என்று கூறலாம்.

தேவையான, சரியான ஒரு கொள்கையை சமுதாயத்தில் பரப்பும் மன நிறைவோடு பெரியாரின் கொள்கைப் பரப்பும் பணியில் பங்கேற்றுள்ள தோழர்கள் கட்சிகளை கடந்து, ஆதரவுக் காட்டி அளித்து வரும் வரவேற்பால் சோர்வுகளை மறந்து பயணத்தை மேற்கொண்டு வருகிறார்கள். தோழர் இராவணன் தலைமையில் நடக்கும் இந்தப் பயணத்தை தோழர் தாமரைக் கண்ணன் ஒருங்கிணைத்து வழி நடத்தி வருகிறார். பயணத்தில் வழி நெடுக பரப்புரை செய்து வருவதோடு பயண நிகழ்வுகளையும் பதிவு செய்து வரும் கோகுல கண்ணன் பயணத்திலிருந்து அனுப்பியுள்ள இரண்டாவது செய்தித் தொகுப்பு.

17.4.2010 முதல் 24.4.2010 வரை திண்டுக்கல் மாவட்டத்தில் வத்தலகுண்டு, செம்பட்டி, திண்டுக்கல், பொன் நகர், கொசவப்பட்டி, சானார் பட்டி, ஒத்தக்கடை நத்தம், கோபால்பட்டி, வி.எஸ். கோட்டை, அதிகாரிப்பட்டி, கம்பிளியாம்பட்டி, செங்குறிச்சி, ஆலம்பட்டி, வடமதுரை அனைப் பட்டி, ரெட்டியார் சத்திரம், புதுச்சத்திரம், கன்னி வாடி, ஸ்ரீராமபுரம், ஒட்டன் சத்திரம், கள்ளி மந்தையம், பொருளூர், தொப்பம்பட்டி, கீரனூர், மானூர், பழனி, கே.வேலூர், காவலப்பட்டி, அய்யம்பாளையம், குப்பம்பாளையம், வேலாயுதம் பாளையம், பாப்பம்பட்டி, வண்டிவாய்க்கால், ராஜாபுரம், கரிக்காரன்புதூர், கனக்கன்பட்டி, பச்சளநாய்க்கன்பட்டி, ஆயக்குடி, நெய்க்காரப் பட்டி, வேடசந்தூர், எரியோடு, அய்யலூர் ஆகிய பகுதிகளில் பரப்புரை நடைபெற்றது.

(4 ஆம் பக்கம்)

## சேலம் நகராட்சியில் கிடாவெட்டி பூசையா?

23.4.10 காலை 11 மணிக்கு சேலம் மாநகராட்சி அலுவலகத்தில் ஆட்டுகிடா வெட்டி பூஜை செய்ததைக் கண்டித்து கழக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு கழக மாவட்டத் தலைவர் செ.மார்ட்டின் தலைமை தாங்கினார்.

சேலம் மாநகராட்சி அலுவலகத்தில் பில்லி சூனியம் இருப்பதாக கருதிய அலுவலக ஊழியர்கள் 18.4.2010 அன்று இரவு 12 மணிக்கு ஒரு ஆட்டுகிடாவை வெட்டி, மாநகராட்சி அலுவலகத்தைச் சுற்றி வந்து, அலுவலக அறைகளில் அதன் இரத்தத்தை தெளித்துள்ளனர். மாநகராட்சி வளாகத்தில் திறக்கப்படாத மூடிய நிலையில் அண்ணாசிலை ஒன்று உள்ளது. அந்த சிலைக்கும் இரத்தம் தெளித்ததாகவும், பத்து பதினைந்து நாட்களாக மாநகராட்சி அலுவலகத்திற்கு வராத சேலம் மேயர் இந்த பூஜையை நடத்திய பின்னரே அலுவலகத்திற்கு வந்ததாகவும் செய்தித் தாள்களில் செய்தி வந்ததைத் தொடர்ந்து கழகத் தோழர்கள் இந்த மூடநம்பிக்கை செயலுக்கு எதிர்ப்பு தெரிவித்து, மாநகராட்சி அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.




ஆர்ப்பாட்டத்தில் மாநகராட்சியின் இச்செயலை கண்டித்து முழக்கம் எழுப்பப்பட்டது. தோழர்கள் டைகர் பாலன், கோவிந்தராசு, பூமொழி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

தோழர் டைகர் பாலன் பேசுகையில், பெரியாரின் கைத்தடியைப் பிடித்து வந்தவர்கள் நாங்கள் அண்ணாவின் தம்பிகள் என்று கூறிக் கொள்ளும் தி.மு.க. ஆட்சியில் தான் அரசு அலுவலகங்களில் மத மூடநம்பிக்கைகள் தலைவிரித்தாடுகின்றன. தி.மு.க.வில் உள்ள வெகு சில பகுத்தறிவாளர்களில் ஒருவரான சேலம் மாவட்ட அமைச்சரின் நேரடி கண்காணிப்பில் இருக்கும் அலுவலகத்தில் இதுபோன்ற மூடநம்பிக்கை செயல்களை செய்த அதிகாரிகளை வன்மையாக கண்டிக்கிறோம். இவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அறிவியல் மனப்பான்மை வளர்க்க வேண்டும் என்று இந்திய அரசியல் சட்டம் கூறும்போது அரசு அலுவலகங்களில் இது போன்ற மூட நம்பிக்கை செயல்கள் நடைபெறுகின்றன. அரசு அலுவலகங்களில் உள்ள கடவுளர்கள் படங்களை உடனடியாக நீக்க வேண்டும். இல்லையெனில் அரசு பேருந்துகள், அலுவலகங்களில் உள்ள கடவுள் படங்களை நீக்கும் பணியில் எங்கள் பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் ஈடுபடுவார்கள் என்றும் எச்சரித்தார். ஆர்ப்பாட்டம் நடைபெறுவதற்கு முன் ஆர்ப்பாட்டத்தை விளக்கி பொது மக்களுக்கு துண்டறிக்கை விநியோகிக்கப்பட்டது. தோழர் சேலம் பாலு நன்றி கூற ஆர்ப்பாட்டம் முடிந்தது.

**தலையங்கம்**

## ரூ.2500 கோடி ஊழல்

உயர் மருத்துவக் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு வழங்கினால், மருத்துவத் துறையில் தரம் சீரழிந்து, நோயாளிகள் மரணமடைந்துவிடுவார்கள் என்று ஓங்கி ஓங்கி கூக்குரலிட்டார்கள் பார்ப்பனர்கள். அப்போது மருத்துவத் துறை பொறுப்பில் இருந்த அமைச்சர் அன்புமணி, இடஒதுக்கீட்டை வலியுறுத்தியதற்காக வேணுகோபாலப் பார்ப்பனர்கள் (இவர் எய்ம்ஸ் உயர் மருத்துவக் கல்வி நிறுவனத்தின் இயக்குனராக இருந்தவர்) அமைச்சருக்கு எதிரான அத்தனை தொல்லைகளையும் உருவாக்கினார்கள். இப்போது கேதான் தேசாய் என்ற குஜராத் பார்ப்பனரின் மகாமகா ஊழல், இப்போது அம்பலமாகியிருக்கிறது. ரூ.1800 கோடி பணமும், 1500 கிலோ தங்கமும் அவரிடமிருந்து மத்திய புலனாய்வுத் துறை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. பஞ்சாப் மருத்துவக் கல்லூரி ஒன்றுக்கு அங்கீகாரம் வழங்குவதற்காக ரூ.2 கோடி லஞ்சம் பெற்றபோது, அவர் பிடிபட்டுள்ளார். மருத்துவக் கல்லூரிக்கான கட்டமைப்பு வசதிகள் இல்லாவிட்டாலும் “கவனிக்க வேண்டிய முறையில் கவனித்தால்”, அங்கீகாரம் கிடைத்து விடும்; முழுமையான கட்டமைப்பு வசதிகளோடு உள்ள கல்லூரி என்றாலும்கூட – ‘கவனிக்காவிட்டால்’ அங்கீகாரம் கிடைக்காது. இதுதான் மருத்துவத் துறையில் இடஒதுக்கீடு வந்துவிட்டால் தகுதி திறமை போய் விடும் என்று கூப்பாடு போட்ட இவர்களின் யோக்கியதை! இந்த ஊழலுக்கு கவுன்சில் உறுப்பினர்கள் அனைவருமே உடந்தையாக இருந்திருக்கிறார்கள். ஊழல் – இவருக்கு புதியது அல்ல. 2000 ஆம் ஆண்டில் இவர், இதே மருத்துவக் கவுன்சில் தலைவராக இருந்தபோது, வருமான வரித்துறையினர் இவர் வீட்டில் சோதனையிட்டு, கணக்கில் வராத ரூ.65 லட்சத்துக்கான, அவர் பெயரில் இருந்த வரைவோலையைக் கைப்பற்றினர். அதிகாரத்தை முறைக்கேடாகப் பயன்படுத்தியதாக அவர் மீது டெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. உயர்நீதிமன்றம் குற்றச்சாட்டை உறுதி செய்ததால், தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அதே பேர்வழி, 2009 ஆம் ஆண்டில் மீண்டும் அதே தலைவர் பதவியைக் கைப்பற்றியுள்ளார்.

இன்னும் வேடிக்கை என்னவென்றால், இரண்டாம் முறை தலைவரானபோது, இவருக்கு போட்டியே இல்லை. டாக்டர் ராணி பாஸ்கரன், டாக்டர் வேத்பிரகாஷ் மிஸ்ரா என்ற இரண்டு பேர் அவரது பெயரை முன்மொழிய, வேறு போட்டியாளர்கள் எவருமில்லாததால், தேசாய் தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டார். இந்தப் பதவிக்கு இந்தியாவிலேயே – இந்த ஊழல் பேர்வழியைவிட்டால் வேறு தகுதியானவர்களே கிடையாதா? தேர்வு செய்யப்பட்ட பிறகும், அவரது முறைகேடுகள் தொடர்ந்தன. இந்திய மருத்துவ கவுன்சில் தலைவரான பிறகு பல மருத்துவக் கல்லூரிகளின் நிர்வாக போர்டுகளிலும் உறுப்பினராக இருந்தார். அதிலே ஒன்று சென்னையில் உள்ள இராமச்சந்திரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம். இந்த பல்கலைக்கழகம்தான் சட்ட விரோதமாக நன்கொடை கட்டணமாக ரூ.40 லட்சம் கேட்டதை கேமிராவில் படம் பிடித்து, ஆங்கில நாளேடு ஒன்று அம்பலப்படுத்தியது.

அப்போது–அவர் இதே கல்லூரியின் போர்டு உறுப்பினர். இதற்குப் பிறகு தான் இதே ஆண்டில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் , இந்த தேசாய்க்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்கி, இந்த ‘நேர்மையின் அவதாரத்தை’ பாராட்டியது. இந்தியா முழுதும் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் ஒவ்வொன்றிலும் இவருக்கு 5 இடங்கள் ஒதுக்கப்படும். அதையும் விற்பனை செய்து வந்தார். இப்போது 3 ஆண்டுகளுக்கான குறுகிய கால மருத்துவப் பட்டப்படிப்புகளைத் தொடங்கும் திட்டத்தை உருவாக்கி, அதற்கு, மத்திய சுகாதாரத் துறை அமைச்சகத்தின் ஒப்புதலையும் பெற்றிருந்தார். இத்திட்டம் அமுலுக்கு வந்தால், பல்லாயிரம் கோடி ரூபாயை ‘அங்கீகாரம்’ வழங்குவதற்காக சுருட்டியிருந்திருப்பார். இவ்வளவு ஊழல் பெருச்சாளியாக இருந்தும்கூட மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத்தின் நம்பிக்கையைப் பெற்றிருந்தார் என்றும், அமைச்சக அதிகாரிகள் தேசாயின் தீவிர ஆதரவாளர்களாக செயல்பட்டனர் என்றும் ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு கூறுகிறது. மேலும் சோதனைகளில்,அவரிடமிருந்து கைப்பற்றப்படும் பணத்தின் மதிப்பு ரூ.2500 கோடியாக உயரும் என்றும் செய்திகள் கூறுகின்றன.

மருத்துவக் கல்லூரிகளுக்கு அங்கீகாரம் வழங்கும் அதிகாரம் இப்படி, ஒரு தனி மனிதரிடம் குவிந்து கிடப்பது தான், அதிர்ச்சியளிப்பதாகும். கல்விதனியார் மயமாகி வருவதால், அது வணிகமயமாகி, ஊழல் கொள்ளைக்கும் வித்திடுகிறது. டெல்லி சாம்ராஜ்யத்தில் இத்தகைய “பார்ப்பன பீடாதிபதிகள்” அதிகார மய்யங்களைப் பிடித்துக் கொண்டு, நாட்டையே கூறு போட்டு, கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். அய்.பி.எல். கிரிக்கெட் மோசடியைத் தொடர்ந்து இந்த மோசடி வெளிவந்திருக்கிறது. இன்னும் வெளிவராமல் இருப்பவை எத்தனையோ!

இது ஜனநாயகமா? பார்ப்பன நாயகமா? மக்களாட்சியா? மகாராசாக்கள் ஆட்சியா?

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 29.04.2010**

# பார்ப்பனிய கொடூரம்

தமிழ் ஈழத்தின் தேசியத் தலைவர் பிரபாகரன் தாயார் பார்வதியம்மாள் இந்தியா வருவதற்கு ‘விசா’ அனுமதியை வழங்கிய இந்திய அரசே, அவர்களை சென்னையில் விமானத்திலிருந்து இறங்கவிடாமல், திருப்பி அனுப்பியதற்கு காரணம் என்ன? இந்தியாவின் உளவு நிறுவனமான ‘ரா’, இந்தப் பிரச்சினையிலும் தனது அதிகாரத்தைக் கைகளில் எடுத்துக் கொண்டு இந்தத் திருவிளையாடல்களை நடத்தியுள்ளதா? உலகத்தின் முன் இந்திய தேசிய ஆட்சி இப்போது கேவலப்பட்டு நிற்கிறது என்பது மட்டும் உண்மை! ஈழத் தமிழர்கள் நடத்திய விடுதலைப் போராட்டத்தின் மீது இந்தியப் பார்ப்பனியம் கொண்டிருந்த வெறுப்பும் பகையும் இன்னும் அடங்கவில்லை என்பதையே இச்சம்பவங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

தமிழக முதல்வருக்கு தெரியாமலே இது நடந்திருக்கிறது என்று அவரைக் காப்பாற்றுவதற்கு திருமாவளவன், சுப. வீரபாண்டியன், கி.வீரமணி என்ற முதல்வரின் முன்னோடும் பிள்ளைகள், சமாதானம் கூறக் கிளம்பியிருக்கிறார்கள். அப்படியானால், தமிழக காவல்துறை, விமான நிலையத்தில், பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தது எப்படி என்ற கேள்விக்கு, அவர்களிடம் பதில் கிடையாது. பிரபாகரன் பெற்றோர் தமிழகம் வரத் தடை விதிக்க வேண்டும் என்று 2003 ஆம் ஆண்டில் முதல்வர் ஜெயலலிதா, மத்திய அரசுக்கு கடிதம் எழுதியதே, காரணமாகக் கூறப்படுகிறது. இதில் ஜெயலலிதாவும் குற்றவாளிதான்! தேர்தல் நேரத்தில் ஈழ விடுதலையைப் பேசிய ஜெயலலிதா, தேர்தல் தோல்விக்குப் பிறகு, ஈழப் பிரச்சினையை மூட்டை கட்டிக் கொண்டு, மவுனம் சாதிக்கிறார். வைகோ நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தில், கட்டுப்பாடாக ஜெயலலிதா பற்றி எவருமே பேசவும் இல்லை. கூட்டணி ‘தர்மம்’ உண்மைகளுக்கு திரையிட்டு விடுகிறது போலும்!

பாலசிங்கம் தமிழகத்துக்கு சிகிச்சைக்கு வர முயன்றபோது, இந்து உள்ளிட்ட பார்ப்பன ஊடகங்கள் அவரை அனுமதிக்கக் கூடாது என்றே எழுதின. அன்றைக்கு நடந்த ஆட்சியும் சிகிச்சைக்கு அனுமதிக்க மறுத்தது. தடை செய்யப்பட்ட இயக்கமாக இருந்தாலும், மருந்துகள் அனுப்பி உதவுவதிலும், மருத்துவ சிகிச்சை அளிப்பதிலும், மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் உலக நாடுகள் பலவும் அனுமதிக்கின்றன. இந்தியப் பார்ப்பனியத்தின் கொடூரமான கோட்பாட்டில் மனித நேயத்துக்கு இடமில்லையே!

## நளினியும் அலைபேசியும்

18 ஆண்டுகளாக ராஜீவ் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் வாடும் நளினியை விடுதலை செய்ய தமிழக அரசு மறுத்த நிலையில் நளினியின் சிறை நடத்தைகளுக்கு, இதுவரை நற்சான்று வழங்கி வந்த சிறை நிர்வாகம், இப்போது நளினி மீது புகார்களை சுமத்துகிறது. அவர் செல்போனை பதுக்கி வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டு, ஏதோ சிறையை உடைத்து அவர் வெளியே வர முயன்றதைப்போல ஊதிப்பெருக்கி, ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன. சிறைக்குள் நடக்கும் மோசமான முறைகேடுகளை விளக்கி, நளினி தனது வழக்கறிஞர் வழியாக காவல்துறை கூடுதல் இயக்குனருக்கு (சிறைத் துறை) தாக்கீது அனுப்பியதே இதற்குக் காரணம் என்பது வெள்ளிடை மலை.

ஏற்கனவே சிறைச்சாலைக்குள் நடக்கும் முறைகேடுகளை விளக்கி, நளினி எழுதிய மூன்று புகார் கடிதங்கள் மீது, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நளினியிடம் செல்பேசி இருந்தது என்பதை சட்டசபையில் விரிவாக விளக்கிப் பேசிய அமைச்சர் துரைமுருகன்கூட, நளினியின் புகார் கடிதங்கள் பற்றி எதுவும் கூறவில்லை. ஆக, அரசு நிர்வாகமே நளினிக்கு எதிராக கூட்டு சதியை அரங்கேற்ற முடிவு செய்துவிட்டது. ச.சிதரூர், அய்.பி.எல் இந்திய மருத்துவக் கவுன்சில் தலைவர், பார்ப்பனர் கேதான் தேசாய் சர்மாவின் ஊழல் என்று காங்கிரசின் ஊழல் நாற்றம் மூக்கைப் பிடிக்க வைக்கிறது. தமிழ்நாட்டு காங்கிரசாரோ நளினியை விடுதலை செய்வதையும், பிரபாகரன் தாய்க்கு சிகிச்சையளிப்பதையும் பெரும் பிரச்சினையாய்ப் பேசிக் கொண்டு, தமிழர்களின் காதில் பூ சுற்றுகிறார்கள்.

வேலூர் சிறைச்சாலைக்குள்ளே பெண் கைதி ஒருவரை சிறை அதிகாரிகள் நிர்வாணமாக்கி, சித்திரவதை செய்ததை எதிர்த்து, மனித உரிமைக்காக உறுதியாகப் போராடினார் நளினி! சிறை அதிகாரிகளால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. 19 ஆண்டுகாலம் குடும்பத்தை, குழந்தையைப் பிரிந்து சிறையில் வாடும் ஒரு பெண்ணின் மனநிலை பற்றிய உளவியல் பார்வைகூட இவர்களிடம் இல்லை.

அப்படியே செல்போன் அவரிடம் இருந்தது என்பதை ஒப்புக் கொண்டால்கூட அது என்ன அவ்வளவு பெரிய குற்றமா? கைதிகளுக்கு தொலைபேசியில் பேசும் உரிமை, மின்விசிறி போட்டுக் கொள்ளும் உரிமைகள் எல்லாம் வந்துவிட்டன. கருநாடகத்தில் சிறை நிர்வாகமே சிறைகளுக்குள் தொலைபேசி சேவைகளையே கைதிகளுக்கு வழங்கியிருக்கிறது. செல்போன் பறிமுதல் செய்யப்பட்ட கைதிகள் மீது வழக்குகள் ஏதும் போடாத சிறை நிர்வாகம், நளினி மீது மட்டும் நான்கு வழக்குகளை ஏன் போடுகிறது?

நளினியின் பக்கம் திரும்பியுள்ள மக்களின் ஆதரவை சீர்குலைத்து அவர் விடுதலையாகிவிடாமல் சிறைக்குள்ளே வைப்பதற்கும், அதன் வழியாக சோனியா காந்தி குடும்பத்தை மகிழ்விக்கவும் தான் தி.மு.க. அரசு இத்தகைய முயற்சிகளில் இறங்கியிருக்கிறது.

## ஈழத் தமிழர்களை திருப்பி அனுப்பாதீர்: மலேசிய தூதரகத்திடம் நேரில் மனு

மலேசியாவுக்கு அடைக்கலம் தேடி வந்துள்ள ஈழத் தமிழர்களை திருப்பி அனுப்பாமல், அவர்களைத் தங்க அனுமதிக்குமாறு சென்னையிலுள்ள மலேசிய தூதரக அதிகாரியிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது. பெரியார் திராவிடர் கழகம் தமிழ்த் தேசப் பொதுவுடைமை கட்சி, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் சார்பில் தோழர்கள் மணியரசன், மற்றும் அவரது அமைப்பைச் சார்ந்த தோழர்கள், கழக சார்பில் ச. குமரன், சேத்துப்பட்டு ராசன் உள்ளிட்ட 25 தோழர்கள், தமிழ்ச் தேசிய விடுதலை இயக்கத் தோழர்கள் நேரில் சென்று தூதரக அதிகாரியிடம் ஏப். 25 ஆம் தேதி மதியம் மனுவை அளித்தனர். மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் வன்னி முகாம்களில் வதைபட்டு பின்னர், இலங்கை அரசால் விடுவிக்கப்பட்ட தமிழர்கள் தங்கள் சொந்த வீடுகளும் கிராமங்களும் தகர்க்கப்பட்டும், சிங்களர்களால் ஆக்கிரமிக்கப்பட்டும் இருப்பதால் வாழ வழியின்றி மலேசியாவுக்கு அடைக்கலம் தேடி வந்துள்ளார்கள். அவ்வாறு படகில் வந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 75 பேரை மலேசிய அரசின் கப்பல் படை தடுத்து, பினாங்குத் துறைமுகம் அருகில் நிறுத்தியுள்ளது.

அவர்களுக்கு அடைக்கலம் தர மறுப்பதுடன் இலங்கைக்கு திருப்பி அனுப்பப் போவதாக மலேசிய அரசு கூறுகிறது. திருப்பி அனுப்பினால் இலங்கை அரசு எங்களைக் கொன்று விடும். அடைக்கலம் கொடுங்கள்; திருப்பி அனுப்பினால் குழந்தைகளுடன் நாங்கள் அனைவரும் கடலில் குதித்து இங்கேயே செத்துப்போவோம்” என்று தமிழ் மக்கள் கூறுகிறார்கள்.

மலேசிய அரசு, மனித நேய அடிப்படையிலும், ஐ.நா. மனித உரிமை அட்டவணைப்படியும் போரினால் பாதிக்கப்பட்டு அடைக்கலம் தேடி வந்துள்ள ஈழத் தமிழர்கள் மலேசியாவில் தங்க அனுமதி அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். எக்காரணம் கொண்டும் அவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்றும் அவ்வாறு திருப்பி அனுப்பினால் 75 உயிர்களை மலேசிய அரசு ஒரு கொலைக் களத்திற்கு அனுப்பி வைத்ததாகும் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்” என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

# வழக்கறிஞர் ப.பா. மோகன் பெருமிதம்

# பகத்சிங் வாரிசுகளாக பெரியார் இயக்கம்

*பெரியார் திராவிடர் கழகத் தோழர்களுக்கு வாதாடியதில் பெருமையடைகிறேன் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வழக்கறிஞர் தோழர் ப.பா.மோகன் குறிப்பிட்டார்.*

*20.3.10 அன்று ஈரோட்டில் நடைபெற்ற பெரியாரியல் விளக்கப் பொதுக் கூட்டத்தில் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி வழக்கறிஞர் ப.பா.மோகன் ஆற்றிய உரையின் தொடர்ச்சி :*

மனிதனை மிருக உலகத்திலிருந்து எது மாற்றியது? சிந்தனை மொழி எல்லாம் உருவானது, பின்னாளில். மனிதனை மனிதனாக மாற்றியது உழைப்பும், கருவியும் என்ற அடிப்படையை மார்க்சியம், டார்வினிசத்திற்குப் பின்பு எடுத்துக் கூறியது.

அன்றைக்கு கரடுமுரடான கல்லை வைத்துக் கொண்டிருந்தவன் - இன்றைக்கு கம்ப்யூட்டரை, அலைபேசியை வைத்துக் கொண்டிருக்கிறான். ஆகவே, கருவி, உழைப்பு இரண்டும் சேர்ந்துதான் சமூகத்தை இன்று மாற்றி அமைத்திருக்கிறது.

என் முன் இருக்கும் மேசை மரத்தில் அப்படியே காய்த்துத் தொங்கவில்லை. மரத்தை வெட்டி எடுத்து வந்து, இழைத்துப் பொருத்திய உழைப்பும், கருவியும் மேசையாக உருவாகியிருக்கிறது. நாம் போட்டிருக்கும் சட்டை, அது அப்படியே பருத்தியில் விளைவதில்லை. அந்தப் பருத்தியை விளைவித்தவன் ஒரு விவசாயி ஆக, ஒரு தாழ்த்தப்பட்டவனாக இருப்பவனால் பருத்தி விளைவிக்கப்பட்டு, அதை அறுவடை செய்து பஞ்சாக்கி, நூலாக்கி, துணியாக இருந்த அதை சட்டையாக மாற்றுவதற்கு பல பேருடைய உழைப்பு இந்த சட்டைக்குப் பின்னால் அடங்கியிருக்கிறது.

ஆகவே, பொருள் உற்பத்திதான் மனித சமூகத்தின் அடிப்படை என்றனர் மார்க்சும், ஏங்கல்சும். அந்தப் பொருள் உற்பத்தியில் ஈடுபடும்போது ஏற்படக் கூடிய உறவுகள்தான் இன்றைக்கு நம்மை நிர்ணயிக் கின்றன. மனிதனுக்கும் - மனிதனுக்கும் இடையே இருக்கும் உறவுகள், மனிதருக்கும் இயற்கைக்கும் உள்ள உறவுகள்தான் நம்மை இன்று நிர்ணயம் செய்து கொண்டிருக்கின்றன.

இந்த விவரங்களையெல்லாம் மார்க்ஸ் அற்புதமாகச் சொல்லிவிட்டுச் சென்றான். ஆனால், அவற்றைப் பொருத்திப் பார்க்கிறபோது ஒரு சமூகத்துக்கு, ஒரு நாட்டுக்கு பொருத்திப் பார்க்கிறபோது அந்த மண்ணைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று சொன்னான்.

அப்படிப் பார்க்கிறபோதுதான், இன்றைக்கு சோவியத் யூனியன், 17 நாடுகளில் சோவியத் யூனியனுக்குப் பிறகு சோசலிஸ்டுகள், கம்யூனிஸ்டு களின் கட்சி ஆட்சிக்கு வந்தது. ஆனால், 2 ஆம் உலகப் போருக்குப்பின் வெற்றிப் பெற்ற சோவியத் யூனியனுக்குப் பின் 90-களுக்குப் பின்னால் அவை எல்லாம் சடசடவென்று சரிந்து போயின. ஆட்சிப் பீடத்தில் கம்யூனிஸ்டுகள் இல்லை என்பதற்காக



கம்யூனிசம் என்றைக்கும் தோற்காது என்பதை உலகம் இன்றைக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு இருக்கிற பிரச்சினைகளுக்குத் தீர்வு என்று சொன்னால், அந்தத் தீர்வு ஒரு பொது வுடைமை அமைப்பாகத்தான் இருக்கிறது - காரணம், அமெரிக்கா. வல்லாதிக்க நாடு என்று சொல்லக்கூடிய அமெரிக்கா, திவாலாகிப் போயிருக் கும் காட்சியைப் பார்க்கிறோம். அங்கிருந்த நிறுவனங்களை வங்கிகள் அத்தனையும் திவாலாகிப் போன காட்சியைப் பார்க்கிறோம்.

ஆனால், உலகத்தில் எல்லா நாடுகளும் திவாலாகி இருக்கும்போது, இன்றைக்கு அமெரிக்காவுக்குப் பக்கத்தில் 80 கிலோ மீட்டர் பக்கத்தில் இருக்கும் கியூபா, 'பிடல் காஸ்ட்ரோ' அமைத்திருக்கும் கியூபா, அவர் உருவாக்கியிருக்கும் வடஅமெரிக்க நாடுகள், அதில் இன்றைக்கு 'சாவேஸ்' போன்றோரை எல்லாம் உருவாக்கி, அமெரிக்கா எதிர்ப்பாக மிகப் பெரிய சக்தியாக உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

**அவைகளிலிருந்து நாம் கற்றுக் கொண்டிருக்கிற பாடமே மண்ணுக்கேற்ற மார்க்சியம்!** அந்த மண்ணுக்கேற்ற மார்க்சியத்தைப் பதிக்கிற போதுதான் ஒரு பொதுவுடைமை இயக்கம் என்பது மலர முடியும். அதில் இந்தியாவைப் பொருத்த வரைக்கும் பெரியார் என்ற ஒரு மாமனிதரை, அந்த இயலை நாம் உணர்ந்து கொண்டு, உள்வாங்கிக் கொண்டு, பொருத்திப் பார்க்காமல் மாற்றத்தைப் படைக்க முடியாது என்பதை நாம் இன்றைக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஆகவேதான் மார்க்சியத்தோடு இன்றைக்குப் பெரியாரியலையும், அம்பேத்காரியலையும் சேர்த்து வைத்து நாம் சரியான திசையில் கொண்டு போனால் தான் இந்தியா என்ற மவுடீகம் கொண்டிருக்கிற நாட்டை நாம் மாற்ற முடியும்.

பகத்சிங் - மிகத் தெளிவாகச் சொன்னான் - முதலில் அவன் தன்னை மாற்றிக் கொண்டான். ஒரு சீக்கியனாக இல்லாமல் ஒரு சரியான போராளியாகத் தன்னை மாற்றிக் கொண்டான். அதற்கு அடிப்படைக் காரணம் சின்னஞ்சிறு வயதில் அவன் அய்ரோப் பாவின் "அனார்க்கிசத்தை"ப் படித்திருக்கிறான், கம்யூனிசத்தைப் படித்திருக்கிறான். அதை உள்வாங்கிக் கொண்டு முதலிலேயே சீக்கியனுக்குரிய முக விலாசத்தை மாற்றினான். தாடியையும், தலைப்பாகையையும் கழற்றினான். மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் உயர்ந்த தலைவர் "சுர்ஜித் சிங்". அவர்கூட சாகிற வரையிலும் தலைப்பாகை வைத்துக் கொண்டிருந்தார்.

பகத்சிங் சொன்னான் - "எங்களுடைய இலக்கு என்பது மிக முக்கியமானது. காந்தியத்தை மறுக்கிறேன். ஏன் மறுக்கிறேன் என்றால், காந்தியம் ஒரு சுரண்டல் கூட்டத்தை அப்புறப்படுத்திவிட்டு, இன்னொரு சுரண்டல் கூட்டத்தை கொண்டுவரப் பார்க்கிறது. எம்மைப் பொருத்த வரைக்கும் முழு விடுதலை வேண்டும், முழு விடுதலை என்று சொன்னால், இங்கு இருக்கும் மதம், மவுடீகம், சட்டம், நீதி, தனிச் சொத்துரிமை - இவைகளைப் புறந்தள்ளிவிட்டு, ஒரு பொது உடைமை கொண்ட சம உரிமை கொண்டிருக்கிற அமைப்பு வேண்டும் என்று சொன்னான். அந்த அமைப்புக்கு அடிப்படையாக இன்றைக்கு இருக்கும் மதம், வகுப்புவாதம், சாதியத்தை உடைப்பது தான் சரி" என்று சொன்னான்.

**அந்த பகத்சிங்கின் வாரிசுகளாக இன்று பெரியார் இயக்கம் இருக்கிறது என்பதைத்தான் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.**

நாம் இன்றைக்கு அரசை எதிர்த்துப் போராடுகிற போது, இன்றைக்கு இருக்கிற மவுடீகத்தை எதிர்த்துப் போராடுகிறபோது, மதத்தையும், சாதியத்தையும் எதிர்த்து ஆணி வேரை ஒழிக்காமல் மாற்றமே செய்ய முடியாது. அதை அடிப்படையோடு சொல்லிக் கொண்டிருக்கிற பெரியார் இயக்கத்தின் முக்கியத் துவத்தை நாம் இன்றைக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எது ஒழிக்கப்பட வேண்டுமோ, அது ஒழிக்கப்படாத காரணத்தால் நாம் இழிநிலைகளைப் பார்க்கிறோம்.

பெரியாரின் அற்புதமான வாசகம், "ஒழுக்கம் என்பது பொதுச் சொத்து - பக்தி என்பது தனிச் சொத்து". பக்தி இல்லாவிட்டால் மற்றவர்களுக்குக் கவலை இல்லை. ஆனால், ஒழுக்கம் என்பது பொதுச் சொத்து. அரசியல்வாதிக்கு முதலில் சொல்லுக்கும், செயலுக்கும் பொருத்தமாக நடந்து கொள்ள வேண்டும். ஆகவே, ஒழுக்கம்தான் பொதுமையென்று சொன்னார்.

பக்தியின் பெயரால், நம்மில் பல பேர் 'சாரு நிவேதிதா' போன்ற எழுத்தாளர்கள்கூட அங்கே காலில் மண்டியிட்டுக் கொண்டிருக்கும் காட்சியைப் பார்க்கிறோம். நித்யானந்தா என்பவன் தியானத்தைக் கற்றுக் கொண்டிருக்கிறான். ஈசா யோகாவின் ஜக்கி வாசுதேவ், மகரிஷி போன்றவர்கள் எல்லாம் தியானத்தைக் கற்றுக் கொண்டு கடவுள் என்ற மாயையைச் சேர்த்து நம்பிக்கையை உருவாக்கு கிறார்கள்.

டாக்டர் கோவூர் சவால் விட்டுச் சொனார், "சாயிபாபா, நீ கைக்கு அடங்கிய பொருள்களை வரவழைத்துக் காட்டுகிறாய். உனக்கு உண்மையிலேயே சக்தி இருக்குமென்றால், கடவுள் என்ற ஒன்று இருந்தால், என் முன் இதைப்போல் இருக்கும் மேசையைக் கொண்டுவா" என்றார். இப்படி சவால் விட்டவுடன் சாயிபாபாவுக்கு நெஞ்சுவலி வந்து மருத்துவமனைக்குச் சென்று விட்டார். கடைசி வரை டாக்டர் கோவூரைச் சந்திக்கவேயில்லை.

ஆகவே, பகுத்தறிவு, சாதி ஒழிப்பு, மத ஒழிப்பு, கடவுள் நம்பிக்கை ஒழிப்பு, என்ற கருத்தும் பரப்புரையும் இன்றைக்கும் மிக மிக அவசியமாகிறது. பெரியார் என்பது பெரியாரியல் என்பது - இன்றைக்குக் காலத்தின் கட்டாயம். அவசியம். எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சி மேடையில் பேசினாலும் சரி, பகுத்தறிவை, உண்மையை, மெய்த் தன்மையை கொண்டிருக்க வேண்டும். அதைத்தான் பெரியாரியல் போதிக்கிறது.

"எதையும் பகுத்துப் பார் - எதையும் ஏன், எப்படி என்று கேள்வி கேள்" என்ற இயலைச் சொல்லக் கூடிய அந்தத் தத்துவத்தைச் சொல்லிக் கொண் டிருக்கக்கூடிய இந்த இயக்கத்தோடு இருந்து கொண்டு, இந்த வழக்கு நடத்திட்ட எங்கள் குழுவுக்குப் பாராட்டு என்பது மிக மிகப் புகழ்ச்சி யானது.

என்னையும் ஒரு இயக்கத்தோடு சேர்ந்தவனாக கருதி, கம்யூனிஸ்டுகள் என்றைக்கும் பெரியாரோடு இணைந்திருப்பது காலத்தின் கட்டாயம் என்பதை உணர்ந்து கொண்டு அந்த வாய்ப்பை பெரியார் திராவிடர் கழகம் நல்கியமைக்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டு, விடை பெறுகிறேன். இவ்வாறு இந்திய பொதுவுடைமைக் கட்சி வழக்குரைஞர் பவானி பபா.மோகன் ஏற்புரை யாற்றினார்.

**தொகுப்பு : நேதா**

## டில்லி – பார்ப்பன சமஸ்கிருத பள்ளிக்கு டில்லி அரசு ரூ.5 கோடி வாரி வழங்கியது

டெல்லியில் பார்ப்பனர்களுக்கு மட்டுமே சமஸ் கிருதப் பயிற்சிப் பள்ளி ஒன்று நடைபெறுகிறது. இதில் பார்ப்பனர்களைத் தவிர வேறு, எந்தப் பிரிவினரும் அனுமதிப்பது கிடையாது. இந்த பார்ப்பன தனியார் நிறுவனத்துக்கு, மத்திய அரசு ரூ.5 கோடி நிதி வழங்கியுள்ளது. நாடாளுமன்றத்தில் அய்க்கிய ஜனதா தள உறுப்பினர் சரத்யாதவ் இதை எழுப்பி தனது கண்டனத்தைத் தெரிவித்தார். தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அனுமதி மறுத்து, சாதி வெறியோடு செயல்படும் தனியார் பள்ளிக்கு, மத்திய அரசு நிதியளித்தது ஏன் என்று சரத்யாதவ் கேட்டார். இதற்கு பதிலளித்த மத்திய மனித வளத் துறை அமைச்சர் கபில்சிபல் ஒரே தவணையில் ஒரு முறை மட்டும் ரூ5 கோடி வழங்கப்பட்டது என்றும், தொடர்ந்து ஆண்டு தோறும் வழங்கப்படவில்லை என்றும் பதில் கூறியிருக்கிறார்.

வாஜ்பாய் ஆட்சி சமஸ்கிருதத்தைப் பரப்ப ஏராளமான நிதி ஒதுக்கீடு செய்தது. காங்கிரசும், அதே பார்ப்பன வழியில் பார்ப்பனர்களுக்கு தாராளமாக சலுகைகளை வாரி வழங்குகிறது.

## அடுத்த இதழில்

**அம்பேத்கர் முகமூடியுடன் கோவையில் கழகம் போராட்டம்**

## கழகப் பயிற்சி முகாம்கள்

மே 22, 23 - சேலம்

மே 29, 30 - மதுரை

மேற்குறிப்பிட்ட தேதிகளில் கழகப் பயிற்சி முகாம்கள் நடைபெற இருக்கின்றன. சேலம் மாவட்ட, மதுரை நகர கழகத் தோழர்கள் பயிற்சி முகாம்களுக்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# 11 நாட்கள் பயணம் பற்றிய தொகுப்பு

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தோழர்கள் புதியவன், கோகுலகண்ணன், நல்லதம்பி (பழனி) ஆகியோர் உரையாற்றினர். தோழர் சிற்பி இராசன் அவர்கள் மந்திரமா, தந்திரமா? நடத்தினார். தோழர்கள் தியாகு, முத்துக்குமார் ஆகியோர் பாடல்கள் பாடினர். இந்தப் பயணத்தில் மூன்று பொதுக் கூட்டங்கள் நடைபெற்றது. இதில் கழகத்தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

திண்டுக்கல் தோழர்கள் சிவசங்கர், சேது இராசேந்திரன், மோகன், விடுதலை சிறுத்தைகள் அமைப்பைச் சார்ந்த கணபதி, நரசிம்ம பல்லவன், தி.மு.க. பாப்பம்பட்டி மற்றும் நெய்க்காரப்பட்டி தோழர்கள், கீசகன் ஆகியோர் பயணக்குழுவினருக்கு உணவு வழங்கினர். தாராபுரம் வழக்கறிஞர் குமார் ரூ.1000 நன்கொடை வழங்கினார்.

செம்பட்டி ஆல்பர்ட், தொப்பம்பட்டி ராசேந்திரன், (ம.தி.மு.க.) பழனி, என்.டி.ராசேந்திரன், (தே.மு.தி.க.) தங்க மங்கை ஏட்டின் செய்தியாளர் கே. கதிர்வேல், பச்சளநாயக்கன், பட்டி கந்தசாமி, பெரியசாமி ஆகியோர் குழுவினருக்கு தேனீர் வழங்கினர். துரை சம்பத், புதுசத்திரம் மூர்த்தி, (தி.மு.க.) மோகன், மானூர் செல்லத்துரை ஆகியோர் திண்டுக்கல் மாவட்டப் பயணத்தில் தோழர்கள் தங்குவதற்கான இடங்களை ஏற்பாடு செய்தனர். பயணம் பற்றிய விரிவான செய்திகள்:

***18.4.2010 - 5 ஆவது நாள் :*** பயணக் குழு தேனி மாவட்டத்தை முடித்து திண்டுக்கல்லில் துவங்கியது. திண்டுக்கல் மாவட்ட செயலாளர் தோழர் இரவனா இல்லத்தில் உணவு வழங்கினார். பொன் நகர், கொசவப்பட்டி, சானார்பட்டி ஆகிய பகுதிகளில் பிரச்சாரத்தை முடித்து ஒத்தக்கடை சென்றவுடன் மின்னாக்கியில் பழுது ஏற்பட்டது, மின்னாக்கியை சரி செய்யும் வரை தோழர் சிற்பி இராசன் ஒலிபெருக்கி இல்லாமலேயே மந்திரமா, தந்திரமா? நிகழ்ச்சியின் மூலம் கூட்டத்தை கூட்டினார். அடுத்து நத்தம் பகுதியில் பிரச்சாரம் முடிவடைந்தவுடன், தோழர் சிவசங்கர் மதிய உணவிற்கு ரூ.400 வழங்கினார். கோபால்பட்டியில் பரப்புரையை முடித்து பயணக்குழு வி.எஸ்.கோட்டை சென்றடைந்தது. வி.எஸ். கோட்டையில் பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இப்பொதுக் கூட்டத்திற்கு துரை சம்பத் தலைமை தாங்கினார். தோழர் சிற்பி இராசனின் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சியும், திண்டுக்கல் சக்தி கலைக் குழுவின் மகளிர் பறையாட்ட நிகழ்ச்சியும் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். மழை பெய்து கொண்டு இருந்தபோதும், மழையில் நனைந்தபடியும், குடை பிடித்துக் கொண்டும் மக்கள் இறுதி வரை கருத்துக்களை கேட்டனர். தோழர் இரவனா நன்றி கூற கூட்டம் முடிவடைந்தது.

***6 ஆவது நாள் :*** அதிகாரிப்பட்டி, கம்பிளியாம்பட்டி, செங்குறிச்சி, ஆலம்பட்டி ஆகிய பகுதிகளில் பரப்புரை நடந்தது. ம.தி.மு.க.வை சார்ந்த சேது ராசேந்திரன் மதிய உணவு வழங்கினார். அடுத்து வட மதுரையில், பேருந்திற்காக காத்திருந்த தவில் இசை கலைஞர் நாகராஜ், தாமாக முன்வந்து தோழர்கள் பாடலுக்கு தவில் வாசித்தார். அனைப்பட்டி, ரெட்டியார் சத்திரம் ஆகிய பகுதிகளில் நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு, புதுச் சத்திரம் பயணியர் விடுதியில் பயணக் குழு தங்கியது.

***7 ஆவது நாள் :*** புதுச் சத்திரம் பகுதியில் தி.மு.க. கிளைச் செயலாளர் மூர்த்தி, பயணக் குழுவை வரவேற்று காலை உணவு வழங்கினார். கன்னிவாடி, ஸ்ரீராமபுரம் ஆகிய பகுதிகளில் பிரச்சாரம் முடிந்தவுடன் தி.மு.க. தோழர் மூர்த்தி மதிய உணவை வழங்கினார். மாலையில் ஒட்டன்சத்திரம் பகுதியை சுற்றிலும் இரவு பொதுக் கூட்டம் நடப்பதைப் பற்றி அறிவிப்பு (சுமார் 3 மணிநேரம்) செய்யப்பட்டது.

ஒட்டன்சத்திரத்தில் ஆசிரியர் மதிவாணன் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்தில் தோழர் சிற்பி இராசன் முதலில் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியை நடத்தினார். அடுத்து ஒரு பேச்சாளர் உரை, சிறிது நேரம் மந்திரமா தந்திரமா என மாறி மாறி நிகழ்ச்சி நடைபெற்றது. கழக தோழியர் மதி, சேலம் கோகுலகண்ணன், திண்டுக்கல் மாவட்ட செயலாளர் இரவனா, மாவட்ட தலைவர் துரை சம்பத் ஆகியோரது உரைக்குப் பின் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். பெரியார் நம்பி நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது. இரவு உணவும், தங்குவதற்கான இடமும் தி.மு.க. பொதுக் குழு உறுப்பினர் தி. மோகன் அவரது செலவில் ஏற்பாடு செய்தார்.

***8 ஆவது நாள் :*** பழனி தோழர்கள் 20 பேரும், மானூர் தோழர்கள் 10 பேரும் தனி வாகனங்களில் வந்து பயணத்தில் இணைந்தனர். கள்ளி மந்தையம் என்ற ஊரில், தி.மு.க. இலக்கிய அணிச் செயலாளர் ச. கருப்பு சாமி, பயணக் குழுவை வரவேற்று காலை உணவு வழங்கினார். கழகத் தலைவர் பயணக்குழுவுடன் உடன் சென்றார். பொருளூரில் ம.தி.மு.க.வினர் பயணக் குழுவை வரவேற்று அனைவருக்கும் குளிர்பானம் வழங்கி, கழகத் தலைவருக்கு சால்வை அணிவித்தனர். தொப்பம்பட்டி, கீரனூர் ஆகிய பகுதிகளைத் தொடர்ந்து மாவட்ட கவுன்சிலரும், தொப்பம்பட்டி ஒன்றிய ம.தி.மு.க. செயலாளருமான துரை ராசேந்திரன் அவருடைய இல்லத்திற்கு அழைத்து இளநீர் வழங்கினார். விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் மாவட்ட பொருப்பாளர் திருவளவன், அவருடைய தோட்டத்தில் அனைவருக்கும் மதிய உணவு வழங்கினார். அ.தி.மு.க.வை சார்ந்த ஆறுசாமி உறுதுணையாக இருந்தார். மானூரில் பிரசாரத்தை முடித்து, பழனி பொதுக் கூட்டத்திற்கு பயணக் குழுச் சென்றது. பழனியில் மிகச் சிறப்பாக பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

தோழர் சிற்பி இராசனின் மந்திரமா, தந்திரமா? நிகழ்ச்சிக்குப் பிறகு மாவட்ட அமைப்பாளர் நல்லதம்பி தலைமை உரையாற்றினார். தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவையின் மாநில அமைப்பாளர் உ. தனியரசு கலந்து கொண்டு சாதி தீண்டாமைக்கு எதிரான கருத்துரையும், கழகத்தின் இம்முயற்சியை வாழ்த்தியும் பேசினார். (உரை பின்னர்) கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். முருகன் நன்றி கூறினார். பயணக்குழுவினர், வழக்கறிஞர் செல்லத்துரை இல்லத்தில் தங்கினர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
தொடர்புக்கு புதிய எண்:
✆ 90030 87605

***9 ஆவது நாள்:*** கே. வேலூர், காவலப்பட்டி ஆகிய பகுதிகளில் பரப்புரை செய்துவிட்டு, ஐவர் மலை அருகே பயணக் குழுவினர் ஓய்வெடுத்தனர். பாப்பம்பட்டி ஊராட்சி துணைத் தலைவர் நரசிம்ம பல்லவன் (தி.மு.க.) மதிய உணவு வழங்கினார். அய்யம்பாளையம், குப்பம்பாளையம், வேலாயுதம் பாளையம் ஆகிய பகுதிகளில் பரப்புரை நடைபெற்றது. பழனி ஒன்றிய தே.மு.தி.க. செயலாளர் என்.டி.ராமச்சந்திரன் தேனீர் வழங்கினார். இரவு பாப்பம்பட்டியில் பரப்புரை நிறைவடைந்தது. தி.மு.க. நரசிம்ம பல்லவன் இல்லத்தில் உணவை முடித்துக் கொண்டு, மானூர் செல்லத்துரை இல்லத்தில் இரவு தங்கினர்.

***10 ஆவது நாள் :*** மானூர் தோழர்கள் வழங்கிய காலை உணவிற்கு பிறகு, வண்டிவாய்க்கால், ராஜாபுரம், கரிக்காரன் புதூர் ஆகிய இடங்களில் பரப்புரை நடைபெற்றது. நெய்க்காரப்பட்டி தோழர்கள் பயணக் குழுவிற்கு மதிய உணவாக மாட்டிறைச்சி பிரியாணி வழங்கினர். மாலை கணக்கன்பட்டியில் தங்க மங்கை நிருபர் கதிர்வேல் அனைவருக்கும் தேனீர் வழங்கி வரவேற்று பேசினார். பச்சளநாய்க்கன்பட்டியில் கழகத் தோழர்கள் கந்தசாமி, பெரியசாமி ஆகியோர் சாலையின் இருபுறங்களிலும் கொடி நட்டிருந்தனர். இங்கு ம.தி.மு.க. தோழர் பி.வைகோ அனந்தகிருட்டிணன் பயணக் குழுவை வாழ்த்திப் பேசினார். இரவு ஆயக்குடி, நெய்க்காரப்பட்டியில் பிரச்சாரம் நடைபெற்றது. சில புதிய தோழர்கள் கழகத்தில் இணைந்தனர். தோழர் சிற்பி இராசன் இப்பகுதியில் கொடியேற்றி வைத்தார். பிறகு பயணக்குழு அங்கிருந்து விடைபெற்றுச் சென்றது.

***11 ஆவது நாள் :*** வேடசந்தூரில் இரண்டு இடங்களிலும், எரியோடு பகுதியிலும் பரப்புரை செய்து, சென்னை கழகத் தோழர் மதிவாணனின் பெற்றோர் சரஸ்வதி-மாறன் ஆகியோர் இல்லத்தில் பயணக்குழுவினருக்கு அசைவ உணவு வழங்கப்பட்டது. திண்டுக்கல் மாவட்டத்தில் இறுதியாக அய்யலூரில் பரப்புரை செய்து விட்டு பயணக்குழுவினர் திருச்சி மாவட்டம் வந்தனர். வையம்பட்டி, மணப்பாறையில் பரப்புரை செய்துவிட்டு, திருவரங்கம் பொதுக் கூட்டத்திற்கு பயணக் குழு புறப்பட்டது. மணப்பாறையில் தமிழ்ச்செல்வன் ஆசிரியர் தேனீர் வழங்கி வழி அனுப்பி வைத்தார்.

## திருவரங்கம் பொதுக் கூட்டம்

மேட்டூர் டி.கே.ஆர். இசைக்குழுவும், திருச்சி பெரியார் இசைக் குழுவும் இணைந்து கொள்கைப் பாடல்களைப் பாடினர். தொடர்ந்து சிற்பி இராசன், 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியை நடத்தினார். தோழர் ஆறுமுகம் வரவேற்புரையாற்ற, திருவரங்கம் நகரத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.முத்து தலைமையுரையாற்றினார். மாவட்ட தலைவர் செ.த.ராசேந்திரன் மற்றும் மாவட்ட பொருளாளர் புதியவன் ஆகியோர் உரையை அடுத்து, கழகத் தலைவர் சிறப்புரையாற்றினார். நகரத் தலைவர் த. அசோக் நன்றி கூறினார்.

தோழர் எஸ்.எஸ். முத்து இல்லத்தில் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. பயணங்களில் மேட்டூர் முத்துக்குமார், திருப்பூர் தியாகு பாடல்களை பாடினர். சேலம் கோகுல கண்ணன், திருச்சி புதியவன், பழனி நல்லதம்பி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

பயணம் தொடருகிறது.

**செய்தி: கோகுல கண்ணன்**

### பயணத்தில் பரபரப்பாக விற்பனையாகும் நூல்கள்

1. இந்துமதப் பண்டிகைகள்
2. கிராம வாழ்க்கை - பெரியார்
3. கடவுளர் கதைகள்
4. "பறையன்" பட்டம் போகாமல் (சாதி-தீண்டாமை பற்றி பெரியார்) உரைகளின் தொகுப்பு
5. அழியட்டும் ஆண்மை - பெரியார்
6. தமிழ்நாட்டில் சாதி தீண்டாமை கொடுமைகள் - ஒரு கள ஆய்வு

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 29th April 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.